# 20-10-2024 செய்தி

## மருத்துவக் காப்பீட்டுக்கு ஜிஎஸ்டி விலக்கு

- ஆயுள் காப்பீடு மற்றும் மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீட்டு தவணைத் தொகைக்கு (பிரீமியம்) சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) இருந்து விலக்களிக்க அமைச்சர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.
- ஆயுள் காப்பீடு மற்றும் மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீட்டு தவணைத் தொகை மீது விதிக்கப்படும் ஜிஎஸ்டியை குறைப்பது மற்றும் விலக்குவது குறித்து ஆய்வு மேற்கொள்ள 13 பேர் கொண்ட அமைச்சர்கள் குழுவை கடந்த செப்டம்பர் மாதம் ஜிஎஸ்டி கவுன்சில் அமைத்தது.
- பிகார் துணை முதல்வர் சாம்ராட்சௌத்ரி தலைமையிலான இந்தக் குழுவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, உத்தரபிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்கம், கோவா, குஜராத், மேகாலயம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் அமைச்சர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ரூ.5 லட்சம் மதிப்பிலான மருத்துவக் காப்பீட்டு தவணைத் தொகை மீது விதிக்கப்படும் ஜிஎஸ்டிக்கு விலக்களிக்கவும், ரூ.5 லட்சத்துக்கும் அதிகமான மருத்துவக் காப்பீட்டுக்கு 18 சதவீத ஜிஎஸ்டி விதிக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.
- ஆயுள் காப்பீடு மற்றும் மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீட்டு தவணைத் தொகை மீது விதிக்கப்படும் ஜிஎஸ்டி-யில் இருந்து முழுமையாக விலக்களிக்கவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்றனர்.
- 20 லிட்டர் மற்றும் அதற்கு மேல் பாட்டில்களில் அடைத்து விற்கப்படும் குடிநீருக்கு ஏற்கெனவே விதிக்கப்படும் 18 சதவீத ஜிஎஸ்டியை 5 சதவீதமாக குறைக்க பரிந்துரைக்கப்பட்டது.
- அதேபோல் நோட்டு புத்தகங்கள், ரூ.10,000 மற்றும் அதற்கும் அதிகமான விலையுள்ள மிதிவண்டிகள் மீது ஏற்கெனவே விதிக்கப்படும் 12 சதவீத ஜிஎஸ்டியை 5 சதவீதமாக குறைக்க வேண்டும்.
- ரூ.15,000 மற்றும் அதற்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படும் ஷுக்கள் மற்றும் ரூ.25,000-க்கும் மேலான கைக்கடிகாரங்களுக்கான ஜிஎஸ்டியை 18 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக உயர்த்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

## தேசிய மகளிர் ஆணையத் தலைவராக விஜயா கிஷோர் ரஹத்கர் நியமனம்

- தேசிய மகளிர் ஆணையச் சட்டம், 1990-இன் பிரிவு 3-இன் கீழ், ஆணையத்தின் தலைவராக விஜயா கிஷோர் ரஹத்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவருடைய பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது அவர் 65 வயதை எட்டும் வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இவருடைய பதவிக்காலம் உடனடியாக தொடங்குகிறது என்றும், இந்த அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிர மாநிலம் ஔரங்கபாதைச் சேர்ந்த ரஹத்கர், தற்போது பாஜக தேசிய செயலாளராகவும், கட்சியின் ராஜஸ்தான் மாநில இணை பொறுப்பாளராகவும் உள்ளார்.
- பாஜக மகளிர் அணி தேசிய தலைவராகவும், மகாராஷ்டிர மாநில மகளிர் ஆணையத் தலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார்.